சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

அசல் வழக்கு எண்.111/2020

2023 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 06 ம் நாள் பி.த.சா.1 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. எஸ். மோகன ரம்யா, பி.ஏ. பி.எல்., சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம் என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வரதராஜ் | வயது | 70 |
| த/பெ | சுப்பையன் | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | 1/146, விஜயா நகர், காளம்பாளையம் | மாவட்டம் | கோவை |
| | | தொழில் | -- |

பிரதிவாதி தரப்பு முதல் சாட்சி முன்னிலை. உறுதிமொழி எடுக்கப்பட்டது.

குறுக்கு விசாரணை (வாதி தரப்பில்)

1. வாதிகள் வழித்தடம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். வாதிகள் வெள்ளியங்காடு சர்வே எண். 498/2 ஏ வில் வழித்தடம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். சர்வே எண்.498/2 ஏ மற்றும் சர்வே எண்486/1 மொத்த பரப்பளவு எவ்வளவு என்றால் சர்வே எண்.498/2 ஏ மற்றும் சர்வே எண்.486/1 மொத்த விஸ்தீரணம் 5.46 ஏக்கர் ஆகும். சர்வே எண்.498/2 ஏ மற்றும் சர்வே எண்.486/1 ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்றால் சாமிநாதன் , ரஞ்சித்குமார் , ராதா ஆகியோருக்கு பாகம் மூலமாக பாத்தியப்பட்டதாகும். நான் சர்வே எண்.486/1 ல் 2 .15 ஏக்கரும் 468/2 ஏ வில் 1.31 ஏக்கரும் 24.05.2018 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் மூலமாக சுப்ரமணியத்திடமிருந்து கிரையம் பெற்றேன்.

2. நான் கிரையம் பெறும்பொழுது அளவீடு செய்துதான் கிரையம் செய்தேன். மேட்டுப்பாளையம் தாலூக்கா சர்வேயரை வைத்துதான் அளந்து பார்த்தேன். நான் முறையாக பணம் செலுத்தி தாலூக் சர்வேயர்அளந்து பார்த்தாரா என்றால் இல்லை. தனிப்பட்டமுறையில் நான் அழைத்ததன்பேரில் அளந்து பார்த்தோம். உரியமுறையில் மனு செய்தால் மட்டும்தான் அரசு சர்வேயர் நிலத்தை அளப்பார் என்றும் நான் அதுபோன்ற நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளவில்லை என்றும் நான் குறிப்பிடுவதுபோல் தாலூக்கா சர்வேயர் நான் கிரையம் பெற்றதாக சொல்லும் சொத்துக்களை அளக்கவில்லை என்றால் சரியல்ல. தாலூக்கா சர்வேயர் ஏதேனும் வரைபடம் கொடுத்தாரா என்றால் இல்லை. தாலூக்கா சர்வேயரை வைத்து நான் அளவீடு செய்யவில்லை என்றும் வழக்கிற்காக அளந்ததாக பொய்யாக வழக்காடுகிறேன் என்றால் சரியல்ல.

3. நான் கிரையம் பெறும்போது தாவா சொத்திற்கான மூல ஆவணங்கள் மற்றும்

விலலங்க சான்றிதழை சரிபார்த்தேன். நான் பார்த்ததாக சொல்லும் வில்லங்க சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய கிரையதாரர் சுப்ரமணி 06.02.2013 தேதியில் கிரையம் பெற்றார். என்னுடைய கிரையதாரர் சுப்ரமணி பொது அதிகார முகவர் தண்டாயுதபாணியிடமிருந்து கிரையம் பெற்றார். தண்டாயுதபாணி அவர்களுக்கு 08.05.2012 ம் வருடத்தில் சாமிநாதன், ரஞ்சித்குமார், ராதா ஆகியோர் பொது அதிகார பத்திரம் எழுதி கொடுத்துள்ளார்கள். 1ம் வாதி தாவா சொத்தில் ஒரு பகுதியை 15.07.2002 தேதியில் கிரையம் பெற்றுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 2ம் வாதி தாவா சொத்தில் ஒரு பகுதியை 15.07.2002 மற்றும் 06.01.2004 தேதிகளில் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். 1 மற்றும் 2 வாதிகள் சாமிநாதன், ரஞ்சித்குமார், ராதா ஆகியோரிடம் கிரையம் பெற்றார்கள் என்றால் 2ம் வாதியிடம் கிரையம் பெற்றது தெரியும்.

4. வாதிகளும் நானும் கிரையம் பெற்ற சொத்துக்கள் சர்வே எண்,498/2 ஏ மற்றும் 486/1ல் அமைந்துள்ளது என்றால் சரிதான். என் கிரையத்தின்போது நான் பார்த்ததாக சொல்லும் வில்லங்க சான்றிதழை ஆவணங்களின் அடிப்படையில் அல்லது சர்வே எண்ணின் அடிப்படையில் பார்க்கப்பட்டதா என்றால் ஆவணங்கள் அடிப்படையில் பார்த்தேன். நான் வில்லங்க சான்றிதழை பார்க்கவில்லை என்றும் தற்போது வழக்கிற்கேற்ப வில்லங்கத்தை பார்த்ததாக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. சாமிநாதன், ரஞ்சித்குமார், ராதா ஆகியோர் வாதிகளுக்கு தாவா சொத்து உள்ளிட்ட சொத்துக்களை விற்றதுபோக மீதமுள்ள சொத்துக்களைத்தான் எனக்கு கிரையம் செய்து கொடுக்க முடியும் என்றால் சரிதான், நான் சுப்ரமணியத்திடம் தான் கிரையம் பெற்றேன். சாமிநாதன், ரஞ்சித்குமார், ராதா ஆகியோர் 1ம் வாதிக்கு சர்வே எண்.486/1 ல் 80 செண்ட்டும் 2ம் வாதிக்கு சர்வே எண்.498/2 ஏ வில் 1.20 ஏக்கரும் விற்பனை செய்துள்ளார்கள்.

5. என்னிடம் காட்டப்படும் 1ம் வாதி பெயரிலுள்ள வா. த. சா ஆ 2 கிரைய பத்திரத்தில் 1ம் வாதி சர்வே எண்.486/1ல் 94 செண்ட் கிரையம் பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா. த. சா ஆ 2 6-வது தாளில் சர்வே எண்.498/2 ஏ மற்றும் 498/2 சி யிலுள்ள தட பாத்தியத்தை பொறுத்து வாசகங்கள் இடம் பெற்றுள்ளது என்றால் சரிதான், கிரைய பத்திரத்தின் மற்ற வாசகங்களுக்கும் வண்டித்தட பாத்தியத்தை பொறுத்து குறிப்பிடப்பட்டுள்ள வாசகங்கள் வேறு வடிவத்தில் மாறுபட்டுள்ளன. நான் தற்போது கோயமுத்தூர் வேளாண்மை பல்கலைக்கழகத்தில் பணி செய்து வருகிறேன். வா. த சா ஆ 2 ஆவணம் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். வா த.சா ஆ 2 ஆவணம் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றும் மேற்படி ஆவணத்தில் இடைசெருகல் செய்ய இயலாது என்றால் சரிதான்.

6. என்னிடம் காட்டப்படும் 2ம் வாதி பெயரிலுள்ள வா. த. சா ஆ 3 கிரைய பத்திரத்தில் 2ம் வாதி சர்வே எண்.498/2 ஏவில் 1 ஏக்கர் 2 செண்ட் கிரையம் பெற்றதாக

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா. த. சா ஆ 3, 6-வது தாளில் சர்வே எண்.498/2 ஏ மற்றும் 498/2 சி யிலுள்ள தட பாத்தியத்தை பொறுத்து வாசகங்கள் இடம் பெற்றுள்ளது என்றால் சரிதான், கிரைய பத்திரத்தின் மற்ற வாசகங்களுக்கும் வண்டித்தட பாத்தியத்தை பொறுத்து குறிப்பிடப்பட்டுள்ள வாசகங்கள் வேறு வடிவத்தில் மாறுபட்டுள்ளன. வா. த சா ஆ 3 ஆவணம் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். வா த.சா ஆ 3 ஆவணம் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றும் மேற்படி ஆவணத்தில் இடைசெருகல் செய்ய இயலாது என்றால் சரிதான்.

7. என்னிடம் காட்டப்படும் 2ம் வாதி பெயரிலுள்ள வா. த. சா ஆ 4 கிரைய பத்திரத்தில் 2ம் வாதி சர்வே எண்.498/2 ஏவில் 20 செண்ட் கிரையம் பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா. த. சா ஆ 4 6-வது தாளில் சர்வே எண்.498/2 ஏ மற்றும் 498/2 சி யிலுள்ள தட பாத்தியத்தை பொறுத்து வாசகங்கள் இடம் பெற்றுள்ளது என்றால் சரிதான், கிரைய பத்திரத்தின் மற்ற வாசகங்களுக்கும் வண்டித்தட பாத்தியத்தை பொறுத்து குறிப்பிடப்பட்டுள்ள வாசகங்கள் வேறு வடிவத்தில் மாறுபட்டுள்ளன. வா. த சா ஆ 4 ஆவணம் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். வா த.சா ஆ 4 ஆவணம் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றும் மேற்படி ஆவணத்தில் இடைசெருகல் செய்ய இயலாது என்றால் சரிதான்.

வாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன்பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

Sd/-S.Mohana Ramya,
சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.